# பாரதியாரும் குள்ளச்சாமியாரும்

[பாரதியார் கவிதைகள்]



ப்ரக்ஞன்

# நூல் விளக்கம்



| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | பாரதியாரும் குள்ளச்சாமியாரும் |
| ஆசிரியர் | : | ப்ரக்ஞன் |
| வெளியீடு | : | பராபரம் |
| வகை | : | உபதேசம் |
| முதற்பதிப்பு | : | 2018 |
| பக்கங்கள் | : | 24 |
| விலை | : | அக விழிப்பு |
| கணினி அச்சு | : | ஓம் கிராபிக்ஸ் |

# பாரதியாரும் குள்ளச்சாமியாரும்

(பாரதி அறுபத்தாறு கவிதைகள்)



## ப்ரக்ருன்



**சுப்பிரமணிய பாரதியார்**

*1882—1921*

பாட்டுத்திறத்தாலே வையத்தை
பாலித்திடவைத்தவர்

# பாரதியாரும் குள்ளச்சாமியாரும்

## முகவுரை

புதுச்சேரியில் வாழ்ந்துவந்த மாங்கொட்டைச்சாமி என்ற குள்ளச்சாமி மூன்றுவிதமான பொருள்களை பாரதிக்கு சுட்டிக் காட்டினார். அவைகள்,

**குட்டிச் சுவர்**
**சூரியன்**
**கிணற்றிலுள்ள சூரியனின் பிம்மம்.**

அவ்வளவுதான்!... இதுதான் உபதேசம்.

புரிந்ததா? என்று குள்ளச்சாமி கேட்டார்.

பாரதியும் புரிந்தது என்றார்.

விசயம் அவ்வளவுதான்!... குள்ளச்சாமி சந்தோஷமாக அங்கிருந்து போய் விட்டார்.

ஆனால், நமக்குத்தான் புரியவில்லை!

நம் நிலையைத் தெரிந்துதான் பாரதியார் அதை விளக்குகிறார்.

அவரது வாழ்வில் நடந்த ஒரு சுவாரஷ்யமான சம்பவம்.

பாரதியார் புதுச்சேரியில் வாழ்ந்தபோது, அவருக்கு ஞானகுருவாக விளங்கியவர் குள்ளச்சாமி. வண்ணான் தொழில் என்ற தலைப்பில் பாரதியார் அவரைப்பற்றி எழுதியிருக்கிறார். அவருக்கு நூறு வயதாகி விட்டது என்றும், பார்ப்பதற்கு நாற்பது வயதானவராகவே காணப்படுகிறார் என்றும் மக்கள் கூறுவர்.

கறுப்பு நிறமும், உருண்டை முகமும் கொண்ட, அவர் நாலரை அடி உயரமே உள்ளவராக இருந்தார். வயிரம் ஏறிய உடல். திக்கித் திக்கி தொடர்பின்றிப் பேசுவார். தெருவிலே படுத்திருப்பார். மண்ணிலே புரள்வார். நாய்களுடன் சண்டை செய்வார். பசித்தபோது சில வீடுகளுக்குச் சென்று பிச்சை எடுத்து உண்பார்.

பெண்களுக்கு அவர் மேல் இரக்கம் உண்டு. திடீரென்று ஒரு வீட்டினுள் நுழைந்து, அந்த வீட்டிலிருக்கும் குழந்தைகளின் நெற்றியில் திருநீறு பூசிவிட்டு ஓடி விடுவார். யாராவது அவரைத் திட்டினாலும், அடித்தாலும் பொறுத்துக்கொண்டு அவ்விடத்தை விட்டு அகலுவார். அவரிடமிருந்து திருநீறு வாங்கிப் பூசிக்கொண்டால் நோய் அணுகாது என்பது பலருடைய நம்பிக்கை.

ஒரு நாள் குள்ளச்சாமியார் கிழிந்த அழுக்குத் துணிகளை மூட்டையாகக் கட்டி, அதைத் தன் முதுகின்மேல் சுமந்துகொண்டு வந்தார். பாரதியார் அவரைக் கண்டவுடன் வழக்கம்போல் வணங்கினார். ஆனால் சாமியார் குறும்புச் சிரிப்பு சிரித்தார்.

பாரதியார் அவரைப் பார்த்து, சாமி!, கந்தைகளைக் கட்டி முதுகின்மேல் வைத்து சுமப்பதேன்? என்று வினவினார். சாமியார், "**நீ நெஞ்சுக்குள்ளே சுமக்கிறாய். நான் முதுகின் மேலே சுமக்கிறேன்**!" என்று விடையளித்துவிட்டு, அங்கிருந்து விரைவில் மறைந்தார்.

**குள்ளச்சாமி கூறியதன் உண்மைப் பொருளை பாரதியார் பின்வருமாறு கூறுகிறார்:-**

அஞ்ஞானம் என்னும் பழைய குப்பைகளையும், பழைய ஞாபகக் கவலைகளையும், பலவகையானத் துன்பங்களையும், சிறுமைகளையும் மனதில் வைத்து வீணாய்ச் சுமந்து திரியும் மனிதனுடைய அறிவீனத்தை விளக்கும் பொருட்டே குள்ளச்சாமி என்ற மாங்கொட்டை சாமி இவ்வாறு கூறினார்.

ஒருநாள் பாரதியார் குள்ளச்சாமியாரைப் பார்த்து விளையாட்டாக, சாமி நீங்கள் ஏன் இப்படி பிச்சை வாங்கி உண்ணுகிறீர்கள். ஏதேனும் தொழில் செய்து பிழைக்கலாம் இல்லையா? என்றார்.

அதற்கு அந்த சாமியார், தம்பி, நான் வண்ணான் தொழில் செய்கிறேன். அது அழுக்குகளை வெளுக்கும் தொழில். அதாவது, ஐம்புலன்கள் என்ற கழுதைகளை மேய்ப்பதும், அந்தக்கரணம் என்ற துணி மூட்டைகளை வெளுப்பதும்தான் என் தொழில் என்றார்.

பாரதியார், சாமியாரே ஞானநெறியில் செல்வோன் எத்தொழிலை முதலில் செய்யவேண்டும்? என்று கேட்டார்.

சாமியார், முதலில் நாக்கை வெளுக்க வேண்டும். பொய், கடுஞ்சொல், இன்னாச்சொல், தற்புகழ்ச்சி, புறங்கூறல் போன்றவைகள் கூடவே கூடாது. அத்துடன் உண்மையே மட்டுமே பேசவேண்டும். மேலும் மனதின் அறியாமையை நீக்குவதே அந்தக்கரணத்தை வெளுத்தலாகும் என்றார்.

**'சும்மா' என்ற தலைப்பைக் கொண்ட ஒரு கட்டுரையில் பாரதியார் குள்ளச்சாமியைப்பற்றி எழுதியது:**

இவர் ஒரு கலியுக ஜடா பரதர். மகாஞானி. எல்லா உயிர்களின் மீதும் இரக்கம் கொண்டவர். பெண்கள் இவரைத் தெருவில் எங்கு கண்டாலும் கையெடுத்து வணங்குவார்கள். அத்துடன், குழந்தைகள் இவரைக் கண்டால் விருப்பத்துடன் ஓடி வருவார்கள்.

**பாரதி அறுபத்தாறு எனும், கவிதைகள் பகுதியில் குள்ளச்சாமியைப்பற்றி பாரதியார் பாடியிருப்பதன் கருத்து:-**

குருவின் திருவருளால் பிறப்பு மாறி அமர நிலை அடைந்துவிட்டேன். பராசக்தியின் திறம், சித்தின் இயல்பு, வானத்தைத் தீண்டும் வகை, ஆகியவற்றை அவர் உணர்த்திக் காத்தார். அமைதி நிலை அளித்து, குப்பாய ஞானத்தால் சாவு எனும் அச்சத்தைப் போக்கினார்.

தெளிந்த ஞானியான இக் குள்ளச்சாமி பாசத்தையும், அச்சத்தையும் நீக்கியவர். அவர் பெருமை எவ்வளவு எழுதினும் அடங்காது. காயகற்பம் சாப்பிட்டவராகையால், அவருடைய வயதைக் கணக்கிட்டுச் சொல்ல யாராலும் இயலாது.

1930 – ஆம் ஆண்டில், பாரதி பாடல்களுக்குத் தகுந்த ஓவியங்கள் சுதேச மித்திரனில் தொடர்ச்சியாக வெளிவந்தன.

அதில், **கே.ஆர். சர்மா** என்ற ஓவியர் வரைந்த படமொன்றில், பாரதியார் தலைப்பாகையைக் கழற்றி வைத்து விட்டு, தரையில் அமர்ந்து, தம் முன்னுள்ள சிறிய மேசையின் மேல் உள்ள புத்தகத்தில் எதையோ எழுதிக் கொண்டு இருப்பதை போலவும், அவர் அருகில் குள்ளச்சாமி நின்று கொண்டிருப்பதுப் போலவும் இங்கு படத்தில் காண்கிறோம்.



## ஸ்ரீ குள்ளச்சாமியின் புகழை பாடும் பாரதியார்

அன்றொருநாள், புதுவை நகரிலே உள்ள கீர்த்தி அடைக்கலஞ்சேரீசுவரன் தர்மராஜா என்ற பெயர் கொண்ட வீதியில், நாகை மாவட்டத்தைச் சேர்ந்த ராஜாராமையா என்பவரின் ஓர் சிறிய வீட்டில், அவரது தாத்தா சமஸ்கிருத மொழியில் இருந்து, தமிழில் மொழி பெயர்த்து வைத்திருந்த உபநிடத நூலை என்னிடம் கொடுத்து, அதில் உள்ள பிழைகளை திருத்தி தருமாறு கேட்கவே, நானும் அவரது வீட்டின் திண்ணையில் சென்று அமர்ந்துக் கொண்டு, அந்த உபநிடத நூலில் உள்ள எழுத்துப் பிழைகளை திருத்திக் கொண்டிருந்தேன். அப்போது, அங்கு குள்ளச்சாமி என்பவர் வந்தார். [23]

அப்போது, நான் குள்ளச் சாமியின் கையை அன்புடன் பற்றிக்கொண்டு, அவரிடம் அவரைப்பற்றி விசாரிக்க ஆரம்பித்தேன். அப்பனே, தேசிகனே!, உங்களை சிலர் ஞானி என்கின்றார்கள் இன்னும் சிலரரோ பித்தன் (பைத்தியக்காரன்) என்கின்றனர். மற்ற சிலரோ என்னிடத்தில் வந்து, அவர் அஷ்டாங்கயோக நெறி நிற்கின்ற சித்தன் என்று புகழுகின்றார்கள். உத்தமனே, பொய்வேடம் போடாமல் தங்களது உண்மை உருவம் என்னவென்று உணர்த்துவீர்களாக! என்றேன். [24]

மேலும், நீ யார்? உனக்குள்ள திறமை என்ன? எதை நீ உணர்ந்துக் கொண்டாய்? இப்படி கிழிந்த ஆசைகளைச் சுற்றிக் கொண்டு திரிவது ஏன்? சிறியவர்களோடும், தெருவில் உள்ள நாய்களுடனும் விளையாடுவது ஏன்? பார்ப்பதற்கு ஒரு பைத்தியக்காரன் போல அலைவது ஏன்? பரமசிவன் பிச்சை எடுத்ததுப்போல, தாங்களும் பிச்சை எடுத்து உண்டுக் கொண்டு, எதிலுமே ஆர்வமில்லாமல் இருப்பதென்ன? உயர்ந்தவனே!, தாங்கள் இதனால் அறிந்துக் கொண்டவைகளை அவசியம் எனக்கு உரைக்க வேண்டும் என்றேன். [25]

பற்றிய என் கையைப் பிடித்து திருகி, அதிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு, குள்ளச்சாமி அங்கிருந்து பரந்தோடப் பார்த்தார். நான் அவரை விடவே இல்லை. அங்கும், இங்கும் திரும்பிப் பார்த்தான், என்னைப் பார்த்து புன்னகைப் பூத்தான். நானும் அவரது தூய தாமரைத் திருவடிகளைப் பார்த்தேன்.

குற்றமில்லாத அந்த குருநாதனும் திமிறிக்கொண்டு, என் கைகளில் இருந்து விடிவித்துக் கொண்டு, குதித்து ஓடி, அந்த வீட்டின் பின்புறமாகச் சென்று விட்டான். நானும் அவரை பின் தொடர்ந்துச் சென்று அவரை வீட்டின் பின்புறத்தில் மடக்கிப் பிடித்து, அவர் எங்கும் செல்ல முடியாதவாறு வழியை மறித்து நின்றுக் கொண்டேன். [26]

அந்த வீட்டின் அருகிலேயே பாழடைந்த, சுற்றுச் சுவர்கள் இடிந்து, விழுந்த பழைய வீடு ஒன்று இருந்தது. அந்த பரம யோகி, தன் அருள் விழியால் என்னை நோக்கி, அந்த குட்டிச் சுவரைக் காட்டினான். பிறகு, வானத்தில் தெரிகின்ற சூரியனைக் காட்டினான். அதன் பிறகு அங்கிருந்த கிணற்று நீரில் தெரிந்துக் கொண்டிருந்த அந்த சூரியனின் பிரதி பிம்பத்தை சுட்டிக் காட்டினான்.

புரிந்ததா? என்று சைகை காட்டினான். புரிந்தது என்றேன். அவ்வளவுதான். அங்கிருந்து புன்முறுவலுடன் புறப்பட்டு விட்டார் நானும், வேதாந்த மரத்தில் வந்த ஒரு வேரைக் கண்டேன். [27]

தேசிகன் எனக்கு காட்டி உணர்த்திய செய்தியை செந்தமிழில் உலகத்தார் உணரும்படி சொல்கின்றேன்.

“வாசியை நீ கும்பத்தால் வலியக் கட்டி, மண்போலே சுவர்போலே வாழ்தல் வேண்டும். மண் இயற்கையானது. மண்ணைச் சேர்த்து குழைத்துக் கட்டிய சுவர் செயற்கையானது. மண் என்றும் இருக்கும். சுவர் இன்று இருக்கும், நாளை போகும். ஆகவே, எப்போதும் சாஸ்வதமாக உள்ள ஒன்றைப் பிடி.

தேஜசுடைய பரிதியின் உருவம் கிணற்றினுள்ளே தெரிவதுப் போல, உனக்குள்ளே சிவனைக் காண்பாய். அருகில் செல்ல முடியாத சக்தி வாய்ந்த சூரியனின் பிம்பத்தை கிணற்றுக்குள் பார்ப்பதுப்போல, அந்த ஒளிப்பொருந்திய

பேரறிவின் பெருமிதத்தை உனக்குள்ளே சிவனாய் (சீவனாய்) காண்பாய்.

கிணற்று நீர் சலனம் இல்லாமல் இருந்தால், அங்கே, சூரியனின் பிம்பம் எப்படித் தெள்ளத் தெளிவாகத் தெரிகின்றதோ? அதுப்போல, சலமற்ற நம் உள்ளத்திலும் சிவன் தெரியும்.

ஆகவே, பேசுவதில் பயனில்லை, அனுபவத்தால் பேரின்பம் எய்துவதே “ஞானம்” என்றார்.

ஆனால், நாம் தேவையற்றவைகளைப் பற்றி பேசிக் கொண்டே இருக்கிறோம். தேவையற்ற பேச்சுக்களை கேட்டுக் கொண்டே இருக்கிறோம். நமக்குள் நாமே பேசிக் கொண்டு இருக்கிறோம். அத்தகைய பேச்சுக்கள் நிற்க வேண்டும். கேள்விகள் நிற்க வேண்டும். மௌனம் வர வேண்டும். அதை அனுபவத்தால் அறிய வேண்டும். அதுவே ஞானம் என்கிறார் பாரதி. [28]

## குருக்கள் துதி (குள்ளச்சாமி புகழ்)

ஞானகுரு தேசிகனைப் போற்றுகின்றேன்;
நாடனைத்துந் தானாவான் நலிவி லாதான்;
மோனகுரு திருவருளால் பிறப்பு மாறி
முற்றிலும் நாம் அமரநிலை சூழ்ந்து விட்டோம்;
தேன்னைய பராசக்தி திறத்தைக் காட்டிச்
சித்தினியல் காட்டி மனத் தெளிவு தந்தான்.
வானகத்தை இவ்வுலகிலிருந்து தீண்டும்
வகையுணர்த்திக் காத்த பிரான் பதங்கள் போற்றி! 19

எப்போதும் குருசரணம் நினைவாய், நெஞ்சே!
எம்பெருமான் சிதம்பரதே சிகந்தாள் எண்ணாய்!
முப்பொழுங் கடந்த பெருவெளியைக் கண்டான்,
முத்தியெனும் வானகத்தே பரிதியாவான்,
தப்பாத சாந்தநிலை அளித்த கோமான்,
தவம் நிறைந்த மாங்கொட்டைச் சாமித்தேவன்,
குப்பாய ஞானத்தால் மரணமென்ற
குளிர்நீக்கி யெனைக்காத்தான், குமார தேவன்! 20

தேசத்தார் இவன் பெயரைக் குள்ளச்சாமி
தேவர் பிரான் என்றுரைப்பார்; தெளிந்த ஞானி
பாசத்தை அறுத்துவிட்டான், பயத்தைச் சுட்டான்;
பாவனையால் பரவெளிக்கு மேலே தொட்டான்;
நாசத்தை அழித்துவிட்டான்; யமனைக் கொன்றான்;
ஞானகங்கை தனை முடிமீதேந்தி நின்றான்;
ஆசையெனும் கொடிக்கொருதாழ் மரமே போன்றான்,
ஆதியவன் சுடர்பாதம் புகழ்கின்றேனே. 21

வாயினால் சொல்லிடவும் அடங்காதப்பா;
வரிசையுடன் எழுதிவைக்க வகையும் எல்லை;
ஞாயிற்றைச் சங்கிலியால் அளக்கலாமோ?
ஞானகுரு புகழினைநாம் வகுக்கலாமோ?
ஆயிரனூல் எழுதிடினும் முடவுறாதாம்;
ஐயனவன் பெருமையை நான் சுருக்கிச் சொல்வேன்;
காயகற்பஞ் செய்துவிட்டான்; அவன் வாழ்நாளைக்
மணக்கிட்டு வயதுரைப்பார் யாரும் இல்லை. 22

## குரு தரிசனம்

அன்றொருநாட் புதுவை நகர் தனிலே கீர்த்தி
அடைக் கலஞ்சேர் ஈசுவரன் தர்மராஜா
என்ற பெயர் வீதியிலோர் சிறிய வீட்டில்,
இராஜாராமையனென்ற நாகைப் பார்ப்பான்,
முன்றனது பிதா தமிழில் உபநிடதத்தை
மொழி பெயர்த்து வைத்ததனைத் திருத்தச் சொல்லி
என்றனை வேண்டிக் கொள்ள யான் சென்றாங்கண்
இருக்கையிலே அங்கு வந்தான் குள்ளச்சாமி. 23

அப்போது நான் குள்ளச்சாமி கையை
அன்புடனே பற்றியது பேசலுற்றேன்:
"அப்பனே! தேசிகனே! ஞானி என்பார்
அவனியிலே சிலர் நின்னைப் பித்தன் என்பார்;
செப்புறு நல்லஷ்டாங்க யோக சித்தி
சேர்ந்தவனென் றுனைப்புகழ்வார் சிலரென் முன்னே
ஒப்பனைகள் காட்டாமல் உண்மை சொல்வாய்,
உத்தமனே! எனக்கு நினை உணர்த்துவாயே. 24

யாவன் நீ? நினைக்குள்ள திறமை என்னே?
யாதுணர்வாய் கந்தைசுற்றித் திரிவதென்னே?
தேவனைப் போல் விழிப்பதென்னே? சிறியாரோடும்
தெருவிலே நாய்களொடும் விளையாட்டென்னே?
பாவனையிற் பித்தரைப்போல் அலைவதென்னே?
பரமசிவன் போலுருவம் படைத்ததென்னே?
ஆவலற்று நின்றதென்னே? அறிந்ததெல்லாம்,
ஆரியனே, அனக்குணர்த்த வேண்டும்" என்றேன். 25

பற்றியகை திருகியந்தக் குள்ளச்சாமி
பரிந்தோடப் பார்த்தான்; யான் விடவேயில்லை,
சுற்றுமுற்றும் பார்த்துப்பின் முறுவல் பூத்தான்;
தூயதிருக் கமலபதத் துணையைப் பார்த்தேன்;
குற்றமற்ற தேசிகனும் திமிறிக்கொண்டு
குதித்தோடி அவ்வீட்டுக் கொல்லை சேர்ந்தான்;
மற்றவன்பின் யானோடி விரைந்து சென்று
வாவனைக் கொல்லையிலே மறித்துக் கொண்டேன்.26

## குரு உபதேசம்

பக்கத்து வீடிடிந்து சுவர்கள் வீழ்ந்த
பாழ்மனையொன் றிருந்ததங்கே; பரம யோகி
ஒக்கத்தன் அருள்விழியால் என்னை நோக்கி
ஒருகுட்டிச் சுவர்காட்டிப் பரிதி காட்டி
அக்கணமே கிணற்றுளதன் விம்பங் காட்டி,
“அறிதிகொலோ! எனக்கேட்டான்” 'அறிந்தேன்'
என்றேன்
மிக்கமகிழ் கொண்டவனும் சென்றான்; யானும்
வேதாந்த மரத்திலொரு வேரைக் கண்டேன். 27

தேசிகன்கை காட்டியெனக் குரைத்த செய்தி
செந்தமிழில் உலகத்தார்க் குணர்த்துகின்றேன்;
"வாசியைநீ கும்பகத்தால் வலியக்கட்டி,
மண்போலே சுவர்போலே, வாழ்தல் வேண்டும்;
தேசுடைய பரிதியுருக் கிணற்றினுள்
தெரிவதுபோல் உனக்குள் சிவனைக் காண்பாய்;
பேசுவதில் பயனில்லை. அனுபவத்தால்
பேரின்பம் எய்துவதே “**ஞானம்**” என்றான். 28

கையிலொரு நூலிருந்தால் விரிக்கச் சொல்வேன்,
கருத்தையதில் காட்டுவேன்; வானைக் காட்டி
மையிலகு விழியாளின் காதலொன்றே
வையகத்தில் வாழுநெறி யென்று காட்டி,
ஐயனெனக் குணார்த்தியன பலவாம் ஞானம்,
அகற்கவன் காட்டிய குறிப்போ அநந்தமாகும்.
பொய்யறியா ஞானகுரு சிதம்பரேசன்
பூமி விநாயகன் குள்ளச்சாமி யங்கே. 29

மற்றொருநாள் பழங்கந்தை யழுக்கு மூட்டை
வளமுறவே கட்டியவன் முதுகின் மீது
கற்றவர்கள் பணிந்தேத்தும் கமல பாதக்
கருணைமுனி சுமந்து கொண்டென்னெதிரே வந்தான்;
சற்றுநகை புரிந்தவன்பால் கேட்கலானேன்;
"தம்பிரானே; இந்தத் தகைமை என்னே?
முற்றுமிது பித்தருடைச் செய்கையன்றொ?
மூட்டை சுமந்திடுவதென்னே? மொழிவாய்" அன்றென்.

30

புன்னகைபூத் தாரினும் புகலுகின்றான்;
"புறத்தே நான் சுமக்கின்றேன்; அகத்தினுள்ளே;
இன்னதொரு பழங்குப்பை சுமக்கிறாய் நீ"
என்றுரைத்து விரைந்தவனும் ஏகி விட்டான்.
மன்னவன் சொற்பொருளினை யான் கண்டு
கொண்டேன்;
மனத்தினுள்ளே பழம்பொய்கள் வளர்ப்பதாலே
இன்னலுற்று மாந்தரெல்லாம் மடிவார் வீணே,
இருதயத்தில் விடுதலையை இசைத்தல் வேண்டும்.31

சென்றதினி மீளாது; மூடரே, நீர்
எப்போதும் சென்றதையே சிந்தை செய்து
கொன்றழிக்கும் கவலையெனும் குழியில் வீழ்ந்து
குமையாதீர்; சென்றதனைக் குறித்தல் வேண்டா;
இன்று புதிதாய்ப் பிறந்தோம் என்று நெஞ்சில்
எண்ணமதைத் திண்ணமுற இசைத்துக் கொண்டு
தின்று விளையாடி யின்புற்றிருந்து வாழ்வீர்;
அஃதின்றிச் சென்றதையே மீட்டும் மீட்டும். 32

மேன்மேலும் நினைந்தழுதல் வேண்டா, அந்தோ!
மேதையில்லா மானுடரே! மேலும் மேலும்
மேன்மேலும் புதிய காற்றெம்முள் வந்து
மேன்மேலும் புதியவுயிர் விளைத்தல் கண்டீர்.
ஆன்மா வென்றெ கருமத் தொடர்பை யெண்ணி
அறிவு மயக்கங் கொண்டு கெடுகின்றீரே!
மான்மானும் விழியுடையாள் சக்தி தேவி
வசப்பட்டுத் தனைமறந்து வாழ்தல் வேண்டும். 33

சென்றவினைப் பயன்களெனைத் தீண்ட மாட்டா;
'ஸ்ரீதரன்யான் சிவகுமாரன் யானன்றோ?
நன்றிந்தக்கணம் புதிதாய்ப் பிறழ்து விட்டேன்;
நான் புதியவன், நான் கடவுள், நலிவிலாதோன்'
என்றிந்த வுலகின்மிசை வானோர் போலே
இயன்றிடுவார் சித்தரென்பார்; பரம தர்மக்
குன்றின்மிசை யொரு பாய்ச்சலாகப் பாய்ந்து
குறிப்பற்றார் கேடற்றார் குலைதலற்றார். 34

குறியனந்த முடையோராய்க் கோடி செய்தும்
குவலயத்தில் வினைக்கடிமைப் படாதாராகி
வெறியுடையோன் உமயாளை இடத்திலேற்றான்
வேதகுரு பரமசிவன் வித்தை பெற்றுச்
செறியுடைய பழவினையாம் இருளைச் செற்றுத்
தீயினைப்போல் மண்மீது திரிவார் மேலோர்,
அறிவுடைய சீடா, நீ குறிப்பை நீக்கி
அநந்தமாம் தொழில் செய்தால் அமரனாவாய். 35

கேளப்பா! மேற்சொன்ன உண்மை யெல்லாம்
கேடற்ற மதியுடையான் குள்ளச்சாமி
நாளும்பல காட்டாலும் குறிப்பினாலும்
நலமுடைய மொழியாலும் விளக்கித் தந்தான்;
தோளைப் பார்த் துக்களித்தல் போலே யன்னான்
துணையடிகள் பார்த்து மனம் களிப்பேன் யானே;
வாளைப்பார்த் தின்பமுறு மன்னர் போற்றும்
மலர்த்தாளான் மாங்கொட்டைச் சாமி வாழ்க! 36

# முடிவுரை

பொதுவாக, சீடனின் தகுதி பார்த்து உபதேசம் செய்ய வேண்டும் என்பதால் ‘குரு உபதேசத்தை மற்றவர்களுக்குச் சொல்லக் கூடாது’ என்பார்கள். முதலில் இராமானுஜர் அந்த விதியை உடைத்தெரிந்தார். தான் அறிந்த உண்மையை ஸ்ரீரங்கம் கோயில் கோபுரத்தில் ஏறி ஊருக்கே உபதேசம் செய்தார். அடுத்து, பாரதியார், குள்ளசாமியாரிடம் தான் பெற்ற உபதேசத்தை, இந்த உலகுக்கே கொடுத்துள்ளார்.



ஓம் தத் ஸத்!

# பாரதியாரும் குள்ளச்சாமியாரும்

[பாரதியார் கவிதைகள்]



ப்ரக்ஞன்